C. 102
IN
2918


தேசபக்தர்களின் புகழை தேன்போல[...]

# காங்கிரஸ் பாட[...]

## பகத்சிங், ராஜகுரு, சுகதேவர் தூக்குதண்டனை.

நான்காம் பாகம

ஸ்ரீ ராமகிருஷ்ண அசோசியேஷன்,
SRI RAMAKRISHNA ASSOCIATION.
KONDANOOR.
19 AUG 193




IMPERIAL RECORD Department
2918

V. R. எழுமலைப் பிள்ளை யவர்களால்,

தமது ஸ்ரீ எம்பிரான் பிரஸில் பதிப்பித்தது

ரிஜிஸ்டர்] 2-9-31 [விலை அணா 2

NATIONAL ARCHIVES LIBRARY
No 2913
Date 7.3.72
GOVT. OF INDIA

உ

ஸ்ரீ வேலுமயிலுந் துணை.

சென்னை முத்தியாலுபேட்டை

பாலசந்தச் சரபக்கவி,

V. A. தியாகராஜ செட்டியாரவர்களால் ஒருங்குத்
திரட்டப்பெற்ற

தேசபக்தர்களின் புகழை தேன்போலினிக்கச்
செய்யும்

# காங்கிரஸ் பாட்டு.

(நான்காம் பாகம்)

பகத்சிங், ராஜகுரு, சுகதேவர்,

## தூக்குதண்டனை.

தாரணியில் அன்புகொண்ட தங்கையை
என்ற மெட்டு.

பல்லவி.

சர்தார் பகத்சிங் தூக்கிற் சாக நியாயமோ

அநுபல்லவி.

சாக நியாயமோ சதுர்முகனுபாயமோ ச

சரணங்கள்.

அற்ப வாழ்வை விடுத்தார்
அரன்பதியை அடுத்தார்
அவர்சேதி கேட்ட நேயர் அழுதுமே துடித்தார் ஐயா ச

SRI RAMAKRISHNA ASSOCIATION,
KONDANOOR.

சுகதேவர் ராஜகுரு
சூக்ஷமுடன் தூக்கிலன்று
துடித்துமடியகாலம் தொகுத்ததோ னன்று ஐயா ச

திடகாந்திர மிருந்தார்
தேசிய வகுப்பில் வந்தார்
கடவுளடியைப் பணிந்து காலமே முடிந்தார் ஐயா ச

ஏழைகட் கருள் கூரவே
எங்கும் சுக முறவே
இயம்பொணுத காஷ்ட முற்ருர் யாவர்க்கும்பொதுவே ச

சர்ஜனர் புகழும் நேசன்
சரபக்கவி தியாகராஜன்
சாற்றினுன் சங்கீதமது சகலர்க்கும் நேசன் ச

# காந்திமகான் சிறப்பு

## இங்கிலிஷ் நேட்.

மங்களம் சேர் இங்கிதமார் மாகாந்தி மகான்
மாசிலாத தேசவிசு வாசிமகான் சுதேசிமகான்
காங்கிரஸார் பாங்குடனே பேரோங்கிடவே
கடல் கடந்து இந்தியாவை காத்து நின்றுர்
மகாத்மா வென்றுர் மங்

தன்னுயிரை முன்திரட்டி கிலாபத் கமிட்டி
சத்தியாக்கிரக சபைதன்னைக் கட்டி
தான்பு காட்டி மங்

சந்தங்கமழ் இந்தியாவில் மாந்திரியாய்
சங்ரலிங்கன் தமிழ் சுதேந்திரியாய்
தான் வந்துதித்தார் மங்

---

சுயராஜியப்பாட்டு 1, 2. பாகங்கள் அவசியம் பார்க்கவும் அணு 2.

# கதருடைச் சிறப்பு

## ஆனந்தக்களிப்பு

காந்திக தருடை தரியும் முன்
காலத்தவர் நடைபோலவே குரியும் கா

மாந்தர்க்கபிமானம் வேணும் அப்போ
மன மகிழ சிறப்படையலாங் காணும்
ஏந்தும் விதரணை தோணும் அதை
எண்ணுவிடில் மனம் பின்னாலே நாணும் கா

சீக்கிரம் கிழியாது மாரும் நாள்
சென்றாலும் வலுவாக யிருக்குமே தேரும்
பாக்கியவழி பெறச் செய்யும் மிக்க
பணச் செலவில்லாமல் உள்ளூரில் நெய்யும் கா

தேசாபிமானிசொற் கேளும் நீயும்
தேசத்தோடு கூடிவாழ்குவாய் நாளும்
மோசக்கருத்தினைத் தள்ளும் நீ
முன்னுக்குவர வெண்ணம் மனதினிற் கொள்ளும் கா

கையினல் நூற்றிட இழையே இந்த
காசினியோராரும் சொல்லார்கள் பிழையே
மெய்யில்தரித்திட உழையே நாம்
முன்னுக்குவந்திட இது நல்ல வழியே கா

பஞ்சையிழை யாக்கி பாவு கண்டை
பற்றிசுற்றி நெய்ய மனதிலே தாவு
கொஞ்சம் கொஞ்சமாக மேவு அது
கொண்டுவருமுன்னுக்கென்றே நீ கூவு கா

---

காந்தி மறியல் பாட்டு 1, 2. பாகம் அவசியம் பார்க்கவும் விலை
அணு 0. 2. 0

முறட்டுதுணியென் றெண்ணுதே நம்
முன்னோர்கள் நடந்திட்ட வழியைத் தள்ளாதே
கறட்டுத்துணியானு லென்ன மானம்
காப்பாற்றிக் கொள்ளுதல்போது மென்றெண்ணே கா
புவியிற் பலபல பாட்டு தினம்
பொழியும் வடிவேலன் தமிழ்கவி கேட்டு
அவியும் விளக்கினை மூட்டு காசு
ஆறுகொடுத்திட கை கொஞ்சம் நீட்டு கா

இராகம்-வசந்தா, தாளம்-ஆதி.

பல்லவி

கதர் கப்பல் கொடி தோணுதே
கரம்சந்ர மோகனதாஸ்காந்தி இந்தியாசுதேச க

அநுபல்லவி.

ஆதியிலே ஞானவாசம்
ஆகிய பாரத தேசம்
இதற்குள் ஜீவப்ரகாசம்
இனி நமக்கே சந்தோஷம்

சரணம்.

மானிடசிப்பிக்குள்ளே மஹாத்மா ஒரு முத்துபோல
ஞானவிரதங்கொண்டு நம்மைக்கார்க்க வந்ததாலே
லௌகீகம் விட்டால்
வைதீகம்
நன்றாய்க்கொள்வோம் நாகரீகம் க
விக்டோரியா ராணியம்மா விடைதந்த நியாயம் சும்மா
உத்தியோக வக்கீலெல்லாம் ஊமையோ பேசார்களம்மா
உதவாதே கட்சி
மிதவாதே
ஒத்துழைத்த லத்யாவசியம் க

---

மகாத்மா காந்தி உப்புசத்தியாகிரகப் பாட்டு விலை அணா 0 - 2 0
அவசியம் பார்க்கவும்.

## சித்தாதி தேவர்கள் என்ற மெட்டு.

மாக்ஷி மிகுந்த சுயாக்ஷிக்குகந்த சொல்
லாக்ஷி வழிதேடு வோம் மஹாத்மா காந்தி
காக்ஷிதனை நாடு வோம்

ஜாதிமத பேத மேதுமில்லாமலே
நீதி பரிபாலிப் போம் தமிழ் மகிமை
ஓதிப் பிரகாசிப் போம்

தாட்டீக மாகக் கை ராட்டின நூலாட்டி
வேட்டி நெய்து கட்டுவோம் ஒற்றுமையை
காட்டி கரந் தட்டு வோம்

ஓரோங்கு மிந்தியரின் பேரோங்குங் கைத்தொழிலே
பாரெங்குமே நாட்டுவோம் தொண்டர்படை
தேரெங்குமே கூட்டுவோம்

## தந்தான தானன தானின என்ற மெட்டு.

சந்தோஷந் தானினிமே ஜெய
நம் தேசமாம் சுயராஜ்யம்
சத்தியமே நித்யமே சாந்த மகாத்மாகாந்தி சகாப்தமே
பஞ்சும் கொஞ்சும் தனிச்சாடையே
கொஞ்சும் பிஞ்சும் கதராடையே
பாரீர் பாரீர் அணிந்துளம் தேரீர் சேரீர்
அணிந்திட பழக்க முறையே
தமிழ்நிலை முனைக்க நிறையே
தலைவர்கள் வணக்க முறையே
அயல்நாட்டு நடையுட துறந்திட
காமயல் மூட்டும் குடிவகை மறந்திட
அன்பும் நண்பும் தைரியமென்றும் வின்பும்

---

மன்மதன் எரிந்தகக்ஷி சிங்காரலாவணி விலை அணா 0 3 0
வசியம் பார்க்கவும்.

சௌரிய அகிம் சகிம் குணம் தெரிந்தனைவரும்
மகிழ்ந்து சம்மதம் புரிந்திடுவோரும்
அச்ச முற்று பாவலன் சொல்
இச்சை யுற்று வெற்றி சுற்றி கூட்டி சா

## லோகமான்ய பால கங்காதர திலகம் என்றமெட்டு

இராகம்-இந்துஸ்தான் பியாக் தாளம்-ஆதி.

கண்ணி.

காம்சந்த்ரமோகனதாஸ் காந்தி சுயராஜ்ய மந்த்ரம்
கருணை நமக்கிருக்க கலங்குவதேன்—நாம்
திரங்கெட்டு மோசம் போனோம் இத்தனை நாள் வரையே
தேர்ந்துக்கொண்டோ மினி ஜெயக்கொடிதான் கா

தொகையறா.

வந்தே மாதர சுயராஜ்ய கொடிதனை போடுங்கள்
வாழ்த்தும் பாரதத்தாயை வணங்கிக்கொண்டாடுங்கள்
நந்தேயத்து மகாத்மா காந்தியைப் பாடுங்கள்
நன்மைபெற வொத்துழைப்போமென சேருங்கள்

ஷை கண்ணித்தொடர்.

கை ரட்டினாலே நெய்த கதருடை பூணுங்கள்
காலத்துக்கேற்ற சுதேசி கோலத்தை பூணுங்கள் கா

## வேலாயுதக்குமரா வேலாயுதா என்றமெட்டு.

பல்லவி.

காந்திமகான் மகாத்மா காந்திமகான்

---

பாபுதாஸ் அவர்களியற்றியது மன்மதன் எரியாதகதை கோள்வ் கா லாவனி விலை அணா 0—6—0 அவசியம் பார்க்கவும்.

அநுபல்லவி.

சாந்தகுண தங்கமே
சகலகலைச் சிங்கமே
சாதகம் பலவே செய்நின்று
நீதகற்றிடும் திருவருள் ஞான கா

தொகையறா.

இந்தியரின் தெய்வமே ஏழைகள் பங்காளனே
இன்பசுகம் மறந்த ஐயனே
நந்தேயம் போற்றும் நாதனே
நறகுண ஞான மெய்யனே

ஷை அநுபல்லவி எடுப்பு.

விலையில்லா மாணிக்கமே
விரும்புவோர்க்கருள் குணமே
வித விதத்தமிழ் நிதம்நிதம் புகல்
பலவிதக்கலை பயின்று சிறந்த கா

# மகாத்மா காந்தியின் உபதேசம்

## குமாரகுருபர சிவனே என்ற மெட்டு.

இராகம்-தேசிகம், தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தேசவபி மானி காந்தி
சொல்வதை கவனி ஜாதி
நேசவழியிற் றுணி பாரத
தேவியடியைப் பணி சுதேச தே
ஜாதிபேதந் தள்ளு சன்
மார்க்கவழியே நில்லு ஜெக
நீதிமார்க்கம் கொள்ளு இழி
வானதெல்லாம்வெல்லு சுதேச தே

---

தர்பாரூடிராமா பாட்டு 4 பாகங்கள் அவசியம் பார்க்கவும் விலை
ரூ 0—6—0—

கள்ளு குடி யாதே சிட்டா
கஞ்சா பிடி யாதே செய்தால்
தள்ள முடி யாதே உன்குல
முழுதும் வெடி யாதே (

அடிமை தொழில் போக்கு கையால்
ஆகும்வேலை நோக்கு அது
உரிமையே னுமக்கு உம
தேசம் செய்தே நமக்கு (

அன்னியர் துணியை யகற்று உள்ளோர்
கதருடையை யுடுத்து தேசம்
கண்யம் பெற உரைத்து கடைக்
தேறும் வழியை நிறுத்து சுதேச (

இராட்டிணங் கொண்டு பஞ்சை
யிழையைசெய் முயன்று நல்ல
வேட்டிசெய்து கொண்டு பெரும்
வர்த்தகம்செய் கண்டு (

## கதர் நூல் பாட்டு.

சூழ்ந்த சர்க்கார் சுற்றுவோம் துணிந்த கதர் நூே
வாழ்ந்திடும் சுதேசமே மகாத்மாகாந்திக்கு
ஜே ஜே ஜே

பாரதத்தாய் அம்பிகை பஜனை பாடுவோமே
பாரதப் பண மாதபத்ம மகாத்மாகாந்திக்கு
ஜே ஜே ஜே

காங்கிரஸில் செம்பீர கதர் பிரமானந்தம்
மாம்பழத்தேன் வேல்சாமிச்சொல் மகாத்மாகாந்திக்(
ஜே ஜே ஜே

---

ஆண் பெண் மர்ம இரகசியங்கள். விலை ரூபா 1—0—

## தேசியத் திலகமென தேசமெங்கிலும் புகழும்,

# ஜவர்லால் நேரு அவர்கள் பேரில்

ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு.

கண்ணிகள்.

தேசிய ஜவர்லால் சீமானே இந்த
தேசமெல்லாம் புகழ் கோனே
பேசும் பிரசங்கப் பூமானே தெய்வ
பாரதி சுதனும் நீர் தானே தே
காந்தி மகான் மொழி போல நல்ல
கதரையணிந்தாய் புவி மேலே
சாந்த மனதுடன் மென் மேலே நீரும்
ஜெனித்தாய் மோதிலால் தவத் தாலே தே
ஒத்துழையாத முறை நீட பூவில்
ஓங்கும் சுயாக்ஷியது நாட
எத்திசையும் புகழ்ந்திசை பாட பொல்லா
ஏக்கங்களெல்லாம் பரந் தோட தே
மோதிலால் மைந்தனும் நீரே இந்து
மதத்தை ஒத்துமை புரிந் திரே
மேதினியில் தியாகராஜன் சீரே எங்கும்
மேன்மையுருகும் ஜெயம் தே

---

சடைவிரித்து மகுடமிட்ட வர்ணமெட்டு

கண்ணிகள்.

இந்தியருக்குகந்த ஆக்ஷி யெங்கிருக்குது காந்தி
இட்டராட்டை சுற்ற அதை பற்றிநிற்குது
வந்த சட்டசபை யெந்த மட்டில் நிற்குது
வாதமது யென்னபலன் பெற்றிருக்குது

---

நிஜப் புளுகன் என்னும் விகடநாவல் விலை அணா. 0 6 0
அவசியம் பார்க்கவும்.

இன்ஞெரு அடி.

வாழுமே நம் கதரைடை நின்
ஆளுவோமே சுயநாடை
மங்களகாந்தி யெம்பெருமா னுக்கு ஜேய் ஜேய் ஜேய் இ

---

## சுயராஜ்யக் கக்ஷியில் திலகம்போல் ஜொலிக்கும்

# சுவாமி சிரத்தானந்தா பேரில்.

## கல்யாணம் செய்து வையுமே என்ற வர்ணமெட்டு

பல்லவி.

சுவாமி சிரத்தானந்தா தேசிய மைந்தா சு

அநுபல்லவி.

க்ஷேமித்த காங்கிரஸ் நிலைபெற்றீடேர
நிபுணரிவர் செய்தார் நிதியுடன் தேர
பூமிபுகழ உழைத்தார் மனமார
புதுமை இதுவன்றோ புகழலங்கார சு

பஞ்சாப்பில் கடந்ததோர் பழியதை நீக்கி
பாமரர்க்கருள் புரிந்தார் மானம் போக்கி
வஞ்சகம் சூதுகள் விலகிடதாக்கி
வையகம் துளிர்த்திட செய்தனர் தேக்கி சு

காந்திமுனிவர் வாக்கை கருதிய தங்கம்
கதருடை யணிந்தவை ராக்கிய சிங்கம்
சாந்தகுணமுள்ள தகைமை சேர்வங்கம்
சங்கமெங்கும் புகழ செய்தார் பிரசங்கம் சு

---

"கிராம்போன் சங்கீதக்களஞ்சியம்" 8-பாகங்களும் ஒரே பைண்டாக செய்தது. விம்ப்பைண்ட். விலை அணு 0—12—0.

தேசியகக்ஷிக்கொரு திலகம்போல் ஜெனித்தாய்
தேவிபாரதியடி தினம் தினம் துதித்தாய்
காசினியில் தியாகராஜனுக் கினித்தாய்
கவிபொழிய மனக் களிப்பதை யளித்தாய் சு

காங்கிரஸ் சபையின் தலைவரான

# V. L. கேசவலு பிள்ளை பேரில்

சுவாமி விவேகானந்தா என்றமெட்டு.

பல்லவி.

காங்கிரஸ் சபைதீரனே கேசவேல் மாரனே கா

அநுபல்லவி.

கலங்கிடும் சுதேசிகட்கு இலகும் தயை பூண்ட குண கா

சரணங்கள்

சோங்சாமலே புவியில் சொகுசுடன் தேசியக்கொடி
ஜோபித மாய்
பாங்குடனே பிடித்தார்
பிரசங்கம் செய்து முடித்தார்
மனங் துடித்தார்
கலங்கிடும் சுதேசிகட்கு இலகும் தயை பூண்ட குண கா
பாரத மாதின் அடி பலநாளுமே பணிந்து
பக்தியுடன்
தாரணியில் கதர் தரித்தார்
வீரமுடனூர் சுரித்தார்
தீரன் தியாகராஜன் சொன்ன தண்டமிழதற்குகந்த கா

இராகம்-சங்கராபரணம், தாளம்-சாப்பு.

வாங்குவீர் கதருடையை
வாழ்வுரும் சகோதரரே
ஓங்குசுயாக்ஷி ஒத்துழையா மாக்ஷி
உத்தம வித்தக வர்த்தகரிடத்தில் வா

ஆதியில் முன்னோர்களெல்லாம்
அணிந்ததும் கதருடையே
பாதியில் நாமே பலி கொடுத்தோமே
பஞ்சாப்ரபஞ்சத்தில் வஞ்சகம் மிஞ்சுவதால் வா

---

காக்ஷி கண்காக்ஷியே என்ற மெட்டு.

பல்லவி.

இந்த மயக்க மேன்
இந்திய சகோதரரே

அநுபல்லவி.

மந்திரமுறைத்த காந்தி மனம்போல் நடப்பீர் சாந்தி இ

மகுடங்கள்.

மானில மீதினில் ஏனினி காண்துயர்
மதுவதை விலக்கி இதமுடன் வாழ்ந்திட இ
மாட்டங்கா பொருளதை நஷ்டமுறவே உமக்கு இ

சரணங்கள்

இன்னாட்டு இலவம் பஞ்சை இனிதாய் நூற்கலாகாதா
இணைத்து அதை ஆடையாக உடுத்திடவும் போகாதா
சொன்னய முடையகாந்தி சொல் மொழியுமாகாதா
சொகுசுள்ள காந்திராட்டை சுற்றிட ஏனோ வாதா
ஜோபிதமுடையதொழி லாச்சே அதனால்
சேணலாபம் கிடைக்குமிப் பேச்சே பரி
தாபிக்கும் அடிமைத்தொழில் ஏச்சே அதை
தள்ளினால் நம் பஞ்சமெல்லாம் போச்சே
ராட்டை சுற்றுவீரே
நல மடைகு வீரே
தாட்டிகமாய் நீரே!
தானிருந்தால் சீரே இ

கள்ளு சாராயம்தன்னைகருதிடவும்போகுமா
கஞ்சா அபினி பங்கி கலந்தடிக்கலாகுமா
துள்ளிநீர் சண்டை வலித்து துடித்திடவு மாகுமா
துக்கமுடனே சூதாடி சுகமிழக்க வாகுமா

பலவழியில் காசைதருகாதே நம்
பாரதத்தாய் கருணையும் மாராதே உலகில்
நிலவும்காந்தி மொழிதனை மீராதே உங்கள்
நண்பன் தியாகராஜன் கவி தோதே
நலம்புரிவீர் நாடி
நானிலமதில் பாடி
கலக்கமின்றி கூடி
கருதுவீர் கொண்டாடி இ



ALI BROTHERS

# அலி சகோதரர் பேரில்

## ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

திலகலாவண்யர் அலி சகோதரப்புண்யர்
கலக்கமில்லா மகம்மதலி கனவான் ஷவுக்கதலி
துலக்கமாக இந்துகட்கு ஜோதியாக வந்த ஒலி தி

ஜாதிமத பேதம் நீக்கி சஞ்சலந் தனையே போக்கி
ஆதிமுதல் சாந்தியுறை யதனை கைகொண்டாரே நோக்கி தி

பாரத தேவி குமாரன் பிரசங்கமதிலுதாரன்
காரணராம் கிலாபத்தின்போர் கருத்துள்ள ஒய்யாரதீரன் தி

சிறைவிகி மீண்டுவந்தார் தேசமெங்கிலும் சிறந்தார்
குறையின்றி புவிமுழுதும் குணமுடனே சுற்றிவந்தார் தி

திடகாத்ரமிகுந்த சீமான் சித்தவைராக்ய பூமான்
தடமதில் துருக்கி சுல்தான் தனைகுருவாய் மதித்த கோமான்

கதருடையணி வைராக்யன் கண்யமிகும் சிலாக்யன்
இதமுடனே தியாகராஜன் இசைக்கவிகருளும் பாக்யன் தி

---

V. R. எழுமலைப்பிள்ளையவர்கள் பதிப்பித்த கொக்கோகம் விலை ரூபா 1—0—0 வேண்டுவோர் உடனே எழுதவும்

## இந்நூலின் பதிப்பாசிரியர்

## சென்னை ஸ்ரீமாந், வி ஆர் ஏழுமலைப்பிள்ளை

## அவர்கள் பேரில் பாடிய வாழ்த்து

யாலபிஷேகப் பழனிமலையப்பன் என்ற மெட்டு.

### கண்ணிகள்.

பாரோர்புகழ்ந்திடும் வி. ஆர். ஏழுமலை
பிள்ளையவரொரு புண்யவானே
சீரார் குகனருள் சேவித்திடுமன்பன்
சீரும் சிறப்புரும் தன்யவானே பா

### தொகையறு.

ஏராளமாகவே பொருட்செலவில் புக்ஷாப்
இச்சென்னைமா நகரில்
தாராளமாய் வால்டாக்ஸ் ரோட்டு இல்லம் நெம்பர்
நூற்றி எண்பத்தொன்பதில்

### ஷை-பாட்டு எடுப்பு.

யாவரு மரிக்கிட வேயரும் வைத்து
தேவையாயுள்ளதோர் நூல்களை பதித்து
பூவுலகந்தனில் மேவிவெளியிடும்
பூமானிவர் பெய ரெங்கும் ஓங்கும் பா

தொகையறு.

''ஐயமிட்டுண்'' என்னும் ஔவையின் அருள்வாக்கு
அநுதினம் யனுசரிப்போன்
பையவே தானர்மம் செய்வதுடன் பற்பல
பாவணர்க்கும் பரிசளிப்போன்

ஷை-பாட்டு எடுப்பு.

ராமன் கம்பெனி நலமுடன் வாழ்க
நயமுடன் ஏழு மலை சீமான் வாழ்க
மாமயில் வேல னருளால் கவிபாடும்
மைந்தன் தியாகராஜன் வாழ்ந்திடவே ப.

காங்கிரஸ பாட்டு
நான்காம் பாகம் முற்றிற்று.

காந்திமரியல் பாட்டு அவசியம் பார்கவும்


கண்ணைக்கவரும் விநோதப் படங்கள் அடங்கிய

# போடோ ஆல்பம்

நேயர்களே! இந்த போடோ ஆல்பத்தில் 12 விதமான பிரஞ்சு லேடிகளின் படுக்கையறை போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப் பெற்றிருக்கின்றன. ஒப்புயர் வற்ற அழகுடைய பாரீஸ் மாதர் லீலாவிநோதமும் பல வற்றை இந்த ஆல்பம் மூலமாய் கண்டு களிக்கலாம்.

விலை ரூபா 1-12-0



எமது விலாசம்:—இராம் அண்டு கம்பெனி,
189 வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்ட், மதறாஸ்.

எப்படிப் பிழைப்பதென்று நினைத்து

## ஏன் கவலைப் படுகின்றீர்கள்.

மாதம் 50 ரூபா முதல் 500-ரூபா வரை சம்பாதிக்கலாம் எப்படி சம்பாதிக்கலாம்மென்றால் கைத்தொழில் வணிக ரகசிய சாஸ்திரமென்னும் புத்தகத்தை வாங்கி வாசித்தால் சோப் செய்யும் விதம், பெப்பர்மிட் மருந்துகள், மெழுகுவத்திகள், கூந்தல் வளரும் பரிமளத்தைலங்கள், சாம்பிராணி வத்திகள், நெருப்புப் பெட்டிகள், இதுபோல் அநேக விதமான சாமான்கள் செய்யும்விதம் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன புத்தகத்திற்கு முந்துங்கள். விலை ரூ. 1 8 0 தபார்சிலவு 0 8 0

### சரீரமர்ம சாஸ்திரம்.

பிரியமதாகவே சரீரமர்மத்தை தெரிந்துக் கொள்ளுங்கள் விலை ரூ 1 0 0 இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களில் அமைப்பும் ஆண் பெண் சிசு உற்பத்தி விபரமும் ஆதியில் எழுதிய இல்லற சிற்றின்பங்களும் அழகிய 64 சித்திரப் படங்களுடன் உள்ளது

### தாய்கிழவிகள் தளுக்கு.

படிக்கப்படிக்க யினிக்கும் ஓர் உயிர்தர தமிழ் நாவல் விலை அணு 8.

### ஆங்கில ஆசான்

60 நாளைக்குள் இங்கிலீஷ்பேசவும படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்வீர் தமிழ் தெரிந்தவர்களுக்கு உபாத்தியாயர் வேண்டியதில்லை. விலை ரூ. 2 0 0

### படுக்கை அறையில் பாசாங்கு

செய்த பங்கஜவல்லி விலை அணு 8.

### நிக்கல் வெள்ளி சிகார் லைட்

பீடி சுருட்டு பிடிப்பவர்களுக்கும் சமையல் செய்யும் பெண்பிள்ளைகளுக்கும் இனிமேல் நெருப்புப் பெட்டி வேண்டியதில்லை

நெ 1 விலை ரூபா 2 0 0

நெ 2 விலை ரூபா 1 0 0

உபயோகிக்கும் விதம் பார்சலுடன் அனுப்பப்படும்.

### ஜெயா கூந்தல்

வளரும் பரிமளத்தைலம் எமது தைலத்தின் குணம் அன்று மலர்ந்த மல்லிகைப் புஷ்பத்திற்கு சமானமானமாயிருக்கும்.

நெ 1 புட்டி விலை ரூபா 1 8 0

நெ 2 புட்டி விலை ரூபா 1 0 0

இதைவிட குறைந்த விலைக்கு கிடைக்கும் அதுகளை வாங்கிவிடலாகாது அந்த என்னையை வாங்கி தடவினவர்கள் கூந்தல் செம்பட்டையாகவும் கூந்தல் உதிர்ந்தும் போய்விடும். வாங்கப் பிரியமுள்ளவர்கள் ஜெயாகூந்தல் வளரும் பரிமலத் தைலத்தையே வாங்குங்கள்.

(ரூபாவதி அல்லது சிதம்பர சாமியார், தமிழ் நாவல் விலை அணு 12)

சாமான் வேண்டியவர்கள் தங்கள் விலாசம் விபரமாய் எழுதவும்.

**இராம் அண்டு கம்பெனி,**

நெ. 47, திருப்பள்ளி வீதி, மதராஸ்.